# நடப்பு நிகழ்வுகள்- நவம்பர் 16 - 2018

- வாடிக்கையாளர்களுக்காக விரிவான சொத்து வணிக சேவைகளை அறிமுகப்படுத்தும் இந்தியாவின் முதல் பொதுத்துறை வங்கி *இந்திய ஸ்டேட் வங்கி (SBI)* ஆகும்.

- அண்மையில் இந்திய ஆராய்ச்சியாளர்கள் **“பாலி ஆக்சைம்”** என்ற புதிய தோலில் பூசப்படும் களிம்பு ஒன்றை உருவாக்கியுள்ளனர். இந்த களிம்பை பெங்களூரில் உள்ள முதல்நிலை உயிரணு அறிவியல் மற்றும் மீட்டாக்க மருத்துவ நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள் ஒரு **நியூக்ளியோபிலிக்** பாலிமரை கொண்டு உருவாக்கியுள்ளனர்.
- டாக்டர் பிரவீண் குமார் லெமுலா தலைமையிலான மருத்துவ குழு இரசாயன முறையில் மாற்றும் செய்யப்பட்ட பாலி ஆக்சைம் களிம்பை உருவாக்கி காப்புரிமை பெற்றுள்ளது.

OXFORD
IAS ACADEMY

- **Nehru and Bose Parallel Lives** என்ற நூலை எழுதியவர் ***ருத்ராங்ஷீ முகர்ஜி*** ஆவார்.

- இந்தியாவின் **முதல் AICTE பயிற்சி மற்றும் கற்றல் அகாடமி** *ஜெய்ப்பூரில்* நிறுவப்பட்டுள்ளது.

- வங்கதேசத்தின் 47 ஆண்டுகால வரலாற்றில் முதல் பெண் படைத்துறை பணித் தலைவராக ***சூசேன் கிட்டி*** நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

- ***சர்வதேச நாணய நிதியத்தின் தலைமைப் பொருளாதார நிபுணராக*** **கீதா கோபிநாத்** என்ற இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கு முன்பு இந்தியாவை சேர்ந்த ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் ரகுராம் ராஜன் இப்பொறுப்பை வகித்துள்ளார்.

- **கிராம பஞ்சாயத்து மேம்பாட்டுத் திட்டத்தின்** நாடு தழுவிய ஆராய்ச்சி நடவடிக்கை திட்டம் **மத்திய பிரதேச மாநிலத்தில்** குவாலியர் பகுதியில் தொடங்கப்பட்டுள்ளது.

- இராஜஸ்தானுக்கு பிறகு பசுக்களுக்கு தனி அமைச்சகம் அமைக்கவுள்ள இரண்டாவது இந்திய மாநிலம் மத்திய பிரதேசம் ஆகும்.

- இரண்டாவது உலக முதலீட்டாளர் மாநாடு 2019 ஜனவரி 23, 24 ஆம் தேதிகளில் நடைபெறும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.

- **INDIA CHEM 2018** என்னும் சர்வதேச கண்காட்சியின் **10**-வது மாநாடு *மும்பையில்* நடைபெற்றது.

- விசாவின் 2018-மின்னணு முறையிலான கட்டணம் செலுத்துதலை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும் தரவரிசையில் இந்தியா **28வது** இடத்தில் உள்ளது. இதில் **நார்வே முதலிடத்தில்** உள்ளது.